நாள்- 06.12.2023

**Case No. OS.121/2013 (DW1 cross )**

**DW1:** வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

பி.வா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் அசல் பத்திரம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். அசல் பி.வா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றம் கேட்கும்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.ஆ. 2ல் குப்பன் கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.ஆ.1 மற்றும் 2ல் பாகபிரிவினையில் வந்த சொத்து என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து வீராசாமிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்று சொன்னால் சரிதான். குப்பன், சீனிவாசனும் சொத்தை விற்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2ல் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்ற சங்கதிகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் ஆவணத்தை தாக்கல் செய்தால் அவருடைய கையெழுத்துக்கள் தெரியவரும் என்பதால் நான் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி பாிகாரம்பெற தகுதியுடையவர் தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.